**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No.287 /2017 |
| Deposition of witness | | PW-10 /LW- 12 |
| Name | | திருமதி. குமாரி செலின் |
| Father's/Husband Name | | திரு.ராஜா |
| Village | | ஆதனூர் |
| Taluk | | பேராவூரணி |
| Age | | 49-2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 19th day of June 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அதிராம்பட்டிணம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு பட்டுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது 01.12.2016 ம் தேதி நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் உத்தரவின் பேரில் நிலைய குற்ற எண் 06/2016 ச/பி. 417,493,294(பி), 506(ii) r/w 147,148 இதச மற்றும் 4 of Dowry Prohibition Act வழக்கின் வாதி செந்தில் என்கிற செந்தில்குமாரி என்பரை பட்டுக்கோட்டை நீதித்துறை நடுவர் அவர்கள் உத்தரவிடப்பட்ட தபாலை பெற்று வாதியை பட்டுக்கோட்டை அரசு மருத்துவனையில் ஆஜர் படுத்தி பரிசோதனை முடித்து அன்றே மருத்தவ பரிசோதனை அறிக்கையினை பெற்று கனம் நீதித்துறை நடுவர் பட்டுக்கோட்டை அவர்களிடம் ஒப்படைத்து நிலையம் வந்து ஆய்வாளர் அவர்களிடம் நடந்த விபரம் கூறினேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

மேலும், 08.12.2016ம் தேதி அன்று நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் உத்தரவின் பேரில் நிலைய குற்ற எண் 06/2016 ச/பி. 417,493,294(பி), 506(ii) r/w 147,148 இதச மற்றும் 4 of Dowry Prohibition Act வழக்கின் எதிரி பாலா என்கிற பாலமுருகன், த/பெ. நாகநாதன், என்பரை பட்டுக்கோட்டை நீதித்துறை நடுவர் அவர்கள் உத்தரவிடப்பட்ட தபாலை பெற்று வாதியை பட்டுக்கோட்டை அரசு மருத்துவனையில் ஆஜார் படுத்தி பரிசோதனை முடித்து அன்றே மருத்தவ பரிசோதனை அறிக்கையினை பெற்று கனம் நீதித்துறை நடுவர் பட்டுக்கோட்டை அவர்களிடம் ஒப்படைத்து நிலையம் வந்து ஆய்வாளர் அவர்களிடம் நடந்த விபரம் கூறினேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பாதிக்கப்பட்டவரை எந்த நேரத்தில் மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து சென்றீர்கள் என்றால் நேரம் சரியாக ஞாபகம் இல்லை. மருத்துவ பரிசோதனைக்கு எந்தந்த கோப்புகளை எடுத்து சென்றீர்கள் என்றால் குற்றவியல் நீதிமன்றத்தின் உத்தரவு தபால். பாதிக்கப்பட்டவரை நான் அழைத்து செல்லவில்லை அவராகத்தான் மருத்துவமனைக்கு சென்றார் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை